# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.29/2025**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | ரமேஷ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மோசஸ் | சமயம் | - | |
| கிராமம் | - | சவரங்காடு | வயது | - | 51/2026 |
| சாதி | - | | | | |

**21-01-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, சவரங்காடு எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 28.06.2024-ம் தேதி காலை 07.00 மணியளவில் நான் வீட்டில் இருந்து வேலை புறப்பட்டுக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி ராஜ்குமார் தனது இருசக்கர வாகனமான TVS XL வாகனத்தில் ஏசுமேரி என்ற பெண்ணை பின்னால் அமர வைத்து புதுத்தோட்டத்தில் இருந்து பாரளைக்கு ஓட்டி சென்ற போது, பத்தேக்கரா பாடி என்ற திருப்பத்தில் மழை பெய்து கொண்டிருந்ததாலும், அந்த பெண் மைக்கா அணிந்திருந்ததாலும் வழுக்கி கீழே விழுந்து விட்டதாகவும், அதில் அவருக்கு தலையிலும், காதிலும், வலது காலிலும் இரத்தம் வருவதாகவும் தனக்கு பயமாக இருப்பதாக சீக்கிரம் வா என்று என்னை போனில் அழைத்தார். நான் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்த போது, அவருக்கு ஏற்பட்ட காயங்களில் இருந்து இரத்தம் வலிந்து கொண்டிருந்தது. பின்னர் மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும் 108 ஆம்புலன்ஸ்க்கு பின்னால் பொள்ளாச்சி மருத்துவமனை சென்று கொண்டிருந்த போது, வால்பாறை காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து ஏசுமேரி இறந்துவிட்டதாகவும், காவல் நிலையம் வந்து கையொப்பம் செய்ய சொல்லி அழைத்தார்கள். நான் காவல் நிலையம் சென்று அவர்கள் எழுதி வைத்திருந்ததில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள

கையொப்பம் என்னுடையதாகும். ( **அந்த புகார் மனுவிலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 28.06.2024-ம் தேதி காலை சுமார் 07.10 மணியளவில் நான் எனது சொந்த வேலையாக எனது பைக்கில் சென்றுவிட்டு, வீட்டிற்கு வருவதற்காக பொள்ளாச்சி to வால்பாறை ரோடு புதுத்தோட்டம் பத்தேக்கரா காடு அருகே வந்து கொண்டிருந்தபோது, எனக்கு போன் வந்ததால் நான் எனது பைக்கை நிறுத்திவிட்டு பேசிக்கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அப்போது, எனக்கு எதிரே எனது அண்ணன் தனபாலின் மனைவி ஏசுமேரி அவரது தாய்மாமன் ஆஜர் எதிரி ராஜ்குமாரின் TVS XL இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து வந்து கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி, இருசக்கர வாகனத்தை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வளைவில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதாலும், வண்டியின் பின்னால் அமர்ந்திருந்த ஏசுமேரி நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஏசுமேரிக்கு பின் தலையில் இரத்தக்காயமும், உள்காயமும், இடது கால் முட்டியில் சிறாய்ப்பு காயமும், இடது காலில் இரத்தம் வடிந்து வந்த நிலையில் காணப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. நானும், மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஆஜர் எதிரியும் 108 ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்தோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி, அரசு மருத்துவமனையில் ஏசுமேரிக்கு முதலுதவி சிகிச்சை பெற்று எனது மனைவி சாந்தியும், ஏசுமேரியின் அக்கா செல்வம் ஆகியோர் ஏசுமேரியை மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்துவிட்டு நான் காவல் நிலையம் வந்து புகார் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. வால்பாறை பகுதிகளில் ஜுன் மாதத்தில் அதிக மழை பெய்யும் என்றால் சரிதான். தேயிலை தோட்டத்தில் வேலை செய்பவர்கள் மழையில் நனையாமல் இருப்பதற்காக இடுப்பு பகுதியில் மைக்கா கட்டிக்கொள்வார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஏசுமேரி வேலைக்கு சென்றதால் மைக்கா கட்டி தான் சென்றதாக எதிரி எனக்கு சொன்னார் என்றால் ஆமாம். மைக்கா கட்டி

வாகனத்தில் உட்கார்ந்து செல்லும் போது வழுக்கி கீழே விழ வாய்ப்பு அதிகம் என்றால் சரிதான். பத்தேக்கரா பாடி பஸ் ஸ்டாப்பிற்கு முன்பும், பின்பும் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். வேகத்தடை இருப்பதால் அந்த திருப்பத்தில் வேகமாக செல்ல இயலாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.